

# திருப்போரூர் ஸ்ரீ வாராகி அம்மன் கோவில் கும்பாபிஷேகம்: திரளான பக்தர்கள் தரிசனம்

திருப்போரூர், நவ. 7–

திருப்போரூர் ஸ்ரீ வாராகி அம்மன் ஆலய அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் வெகு விமரிசையாக நடைபெற்றது. திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் பேரூராட்சிக்குட்பட்ட 11 வது வார்டு கன்னியம்மன் கோயில் தெருவில் புதிதாக கட்டி முடிக்கப்பட்ட ஸ்ரீ வாராஹி அம்மன் ஆலயத்தின் அஷ்ட பந்தல மகா கும்பாபிஷேக விழாவையொட்டி கடந்த திங்கட்கிழமை, முதல் கால யாக பூஜை கணபதி ஹோமத்துடன் பல்வேறு வேள்விகள் துவங்கி புதன்கிழமை இரண்டாம் கால யாக பூஜை மூன்றாம் காலயாகபூஜை என பல்வேறு வேள்விகள் முடிவுற்றது.

இதைத் தொடர்ந்து இன்று மங்கள வாத்தியம் வானவேடிக்கைகள் முழங்க யாகசாலையில் உள்ள புனித நீர் உள்ள கலசத்தை சிவாச்சாரியார்கள் கொண்டு சென்று கோவில் விமானத்திற்கும் மூலவர் ஸ்ரீ வாராகி அம்மனுக்கு புனித நீரை ஊற்றி மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. பின்னர் மூலவர் வாராஹி அம்மனுக்கு சிறப்பு அலங்காரம் தீபதூப ஆராதனைகள் காட்டப்பட்டன. அப்போது அங்கு கூடியிருந்த திரளான பக்தர்கள் வரிசையில் நின்று சாமி தரிசனம் செய்தனர். க்தர்களுக்கு திருக்கோவில் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டன.

மகா கும்பாபிஷேக விழாவில் 11 வது வார்டு கவுன்சிலர் சந்திரன் , திருப்போரூர் பேரூராட்சி தலைவர் காலவாக்கம் மு. தேவராஜ் அனைத்து கட்சியினர்கள் ஊர் பெரியவர்கள் கிராம பொதுமக்கள் விழா குழுவினர்கள் கலந்து கொண்டனர். இக்கோவிலில் தொடர்ந்து 48 நாட்களுக்கு மண்டல அபிஷேகம் நடைபெற உள்ளது. திருப்போரூர் பேரூராட்சிக்கு உட்பட்ட 3 கிராமங்களை உள்ளடக்கிய 15 வார்டுகளில் 12வது வார்டில் மட்டும்தான் வாராஹி அம்மனுக்கு ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.



# ஜெயப்பிரியா பள்ளி சார்பில் ஆதரவற்ற குழந்தைகளுக்கு உதவிகள்

நெய்வேலி, நவ. 7–

நெய்வேலி வடக்குத்து ஜெயப்பிரியா பள்ளிக் சீனியர் செகண்டரி பள்ளியின் சார்பாக ஆதரவற்ற குழந்தைகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டது.

ஜெயப்பிரியா பப்ளிக் சீனியர் செகண்டரி பள்ளியின் தாளாளர் சி.ஆர். ஜெய்சங்கர், இயக்குனர் என். எஸ். தினேஷ் ஆகியோரின் வழிகாட்டுதலின் பேரில் ஜெயப்பிரியா பப்ளிக் சீனியர் செகண்டரி பள்ளியின் செயலர் ஆர். சிந்து, முதல்வர் பிந்து சி.ஆர். நாயர் ஆகியோர் ஏற்பாடு செய்தனர். சிறுவயதிலேயே மாணவர்களின் மனதில் அன்பு, கருணை, இரக்கம் உதவி போன்ற நற்சிந்தனைகளை வளர்க்க வேண்டும் என்கிற உயரிய நோக்கில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஜெயப்பிரியா சீனியர் செகண்டரி பள்ளி ஆதரவற்றோர் மற்றும் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு உதவிகளை வழங்கிட முயற்சிகளை முன்னெடுத்தது. இந்த முயற்சி பெற்றோர்களுக்கும் மாணவ; fளுக்கும் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் இன்முகத்தோடு வழங்கிய இனிப்புகள், ஆடைகள், எழுது பொருள்களோடு ஜெயப்பிரியா பப்ளிக் சீனியர் செகண்டரி பள்ளியும் மாணவ மாணவிகளும் இணைந்து வடலூர் அருகில் இயங்கிவரும் வசந்தம் ஆதரவற்றோர் இல்லதிற்குச் சென்று அங்குள்ள குழந்தைகளுக்கு வழங்கினர்.

அக்குழந்தைகளோடு நமது பள்ளியின் குழந்தைகளும் விளையாடி மகிழ்ந்து நிகழ்ச்சியை சிறப்பித்தனர்

# அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துடன் எகோ ஆசியா பன்னாட்டு ஆராய்ச்சி மையம் புரிந்துணர்வு ஒப்பந்தம்

சிதம்பரம், நவ.7

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துடன் எகோ ஆசியா என்ற பன்னாட்டு ஆராய்ச்சி மையம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டது.

வேளாண்மை மற்றும் பல்கலைக்கழகத்தில் உள்ள இதர துறைகளுடன் இணைந்து உயர் ஆராய்ச்சிகளை செய்தல், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் திறன் மேம்பாடு, மாணவர்களுக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், பாரம்பரிய வேளாண் தொழில் நுட்ப பாதுகாப்பு, பாரம்பரிய விதை பராமரிப்பு மற்றும் கடலோர மாவட்ட உழவர்களின் வாழ்வாதார மேம்பாட்டு பணிகளை இணைந்து செய்ய பல்கலைக்கழக துணைவேந்தர் இராம. கதிரேசன் மற்றும் எகோ ஆசியா ஆராய்ச்சி மையத்தின் இயக்குனர் பேட்ரிக் செயில் ஒப்பந்தத்தை செய்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் எகோ ஆசியா மையத்தின் தெற்காசிய தலைவர் கிளாடு ஸ்டோன்



ஆர் ராஜேஷ்குமார், பல்கலைக்கழக தேர்வு கட்டுப்பாடு அதிகாரி ஆர். எஸ். குமார், புரிந்துணர்வு ஒப்பந்த மைய ஒருங்கிணைப்பாளர் பெ. கருப்பையா, இயந்திர பொறியியல் துறைத்தலைவர் எஸ். வைத்தியநாதன், பல்கலைக்கழக உள்தர மதிப்பீட்டு மைய துணை இயக்குனர் எஸ். ரமேஷ் குமார், மக்கள் தொடர்பு அதிகாரி க. ரெத்தினசம்பத், துணைவேந்தரின் நேர்முக உதவியாளர் ஜே.எச். பாக்யராஜ், புரிந்துணர்வு மைய தனி அதிகாரி பாலாஜி மற்றும் அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.


## வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் கிண்டி, சென்னை - 600032.
**ந.க.எண்: 0490/2024**

D.நாராயணசாமி நாயக்கர்
த/பெ. துரைசாமி நாயக்கர்
எண். 60/45, துரைசாமி தெரு,
லட்சுமிபுரம், திருவான்மியூர்,
சென்னை -600041. ...மனுதாரர்

-எதிர்-

உயர்திரு.
வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்,
கிண்டி, சென்னை - 600 032
...எதிர் மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரர் D.நாராயணசாமி நாயக்கர் என்பவர் தனது தந்தை திரு. துரைசாமி நாயக்கர் அவர்கள் கடந்த 11.10.1968-ம் ஆண்டு உடல்நிலை சரியில்லாமல் சென்னை ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் இறந்து விட்டார். அப்போதைய சூழ்நிலையில் இறந்ததை பதிவு செய்ய தவறிவிட்டதால் தற்போது அவர்களின் இறப்பினை பதிவு செய்யக்கோரி வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் அதனை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் 15 தினங்களுக்குள் நேரில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம் என இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

**D.நாராயணசாமி நாயக்கர்**
**மனுதாரர்**



## PUBLIC NOTICE (Lost of Document)

This is to inform that the general public that my client Mr. L. HARIKRISHNA, aged 40 years, son of late M.K.Loganathan, presently residing at No. 17/8, Jeyammal Street, Ayyavoo Colony, Aminjikari, Chennai 600 029, is the owner of the property being land of an extent of 3 acres 20 cents in Survey Nos. 62/2 and 63/5, situated at Orakkadu Village, (earlier Kirudalapuram Village, Chengalpet District) presently Ponneri Taluk, Tiruvallur District.
My client had executed a Lease Deed 14.10.2023, registered as Doc. No. 15426/2023, at SRO-Red Hills in favour of Dr. MK Loganathan Educational Trust, in respect of said property. My client misplaced the originals of the following documents.

1. Lease Deed 14.10.2023, bearing Doc. No. 15426/2023, registered at SRO-Red Hills
2. Deed of Power of Attorney dated 20.12.2012, bearing Doc. No. 4948/2012, registered at SRO-Shoolagiri
3. Deed of Power of Attorney dated 22.04.2013, bearing Doc. No. 1577/2013, registered at SRO-Shoolagiri

If anybody is in possession of the original of the said document, please handover to the address mentioned below.

**ELA. PUGAZHENDHI, Advocate**
A-2, First Floor, Roop Emerald
No.45, North Usman Road
T. Nagar, Chennai -600 017.

Chennai
07/11/2024



## NOTICE OF LOSS OF SHARE CERTIFICATES
**(FOR CLAIM FROM IEPF AUTHORITY)**

Pursuant to Rule 8 of the Investor Education and Protection Fund (Accounting, Audit, Transfer and Refund) Rules, 2016, NOTICE is hereby given that the following share certificates issued by the Company, Shriram Transport Finance Company Limited, registered in my / our name, has / have been lost / misplaced :

| Folio No. | Name of Shareholder(s) | Shares | Share Certificate No(s). | Distinctive Nos. | |
|---|---|---|---|---|---|
| | | | | From | To |
| 70974 | AML.Balasubramanian | 450 | 611250 | 71122249 | 71122698 |

Any person who has a claim in respect of the said securities should lodge such claim with evidence to the Company, at its Registered Office, Shriram Transport Finance Company Limited, 14A, South Phase, Industrial Estate, Guindy, Chennai – 600 032 or to its Share Transfer Agents, Integrated Registry Management Services Private Limited, "Kences Towers", 2nd Floor, No.1 Ramakrishna Street, North Usman Road, T Nagar, Chennai – 600 017, within 15 days publication of this notice, else the Company will proceed to settle the claim in favour of the registered holder(s). The Company shall not entertain any claim thereafter. Any person dealing with the above said shares will be doing so at their own risk.

Name of the Shareholder
**AML. Balasubramanian**
Adress: 40/C Kattukara street, Madapuram,
Thiruvarur 610001, Mob. 8883370453

Place : Chennai
Date : 06/11/2024



சற்குரு துணை

## ஸ்ரீ அகண்ட பரிபூரண சச்சிதானந்த சபை

Regd No. S.No.9 of 1945, Act XXI of 1860
(32 of 1987 of TN Society Act 1975)
எண்.293, வேளச்சேரி மெயின் ரோடு, குருக்ஷேத்திரம், இராஜகீழ்பாக்கம்,
சென்னை–600 073

**பொதுக்குழு / பேரவைக் கூட்ட அறிவிப்பு**

ஸ்ரீ அகண்ட பரிபூரண சச்சிதானந்த சபையின் (தலைமை சபை) குருக்ஷேத்திரம், இராஜகீழ்பாக்கம், சென்னை–600073வருடாந்திரப்பொதுக்குழுகூட்டம்எதிர்வரும்22.11.2024வெள்ளிக்கிழமையன்று காலை 11 மணிக்கு சபை வளாகத்தில் நடைபெற உள்ளது. கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பொதுக்குழுவில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் பரிசீலனை செய்யப்படும்

**தீர்மானங்கள்**

1. 2023–24ஆம் ஆண்டிற்கான சபையின் ஆண்டறிக்கை வாசித்து ஏற்பது
2. 2023–24ஆம் ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட வரவு–செலவு கணக்குகள் ஏற்பது
3. 2023–24ஆம் ஆண்டிற்கான தணிக்கையாளர் நியமனம்
4. 2023–24ஆம் ஆண்டிற்கான உத்தேச திட்ட மதிப்பீடு அறிக்கைக்கு ஒப்புதல்
5. 2023–24ஆம் ஆண்டில் குரு திருவடி அடைந்த அன்பர்களுக்கு அஞ்சலி செலுத்துதல்
6. செயற்குழு தலைவரின் அனுமதியோடு கொண்டு வரும் இதர தீர்மானங்கள்

குறிப்பு : பொதுக்குழு உறுப்பினர்கள் தவறாமல் இந்த அறிவிப்பைக் கொண்டு வர வேண்டும். தனிநபர் கொண்டு வரும் தீர்மானங்கள் 4 நாட்களுக்கு முன்னதாக சபை அலுவலகத்தில் கொடுக்க வேண்டும்.

**செயற்குழுத் தலைவர்**



## விற்பனை அறிவிப்பு

**ஹால்மார்க் லிவிங் ஸ்பேஸ் பிரைவேட் லிமிடெட் (கலைப்பில் உள்ளது)**
CIN : U45400TN2012PTC084362
பதிவு அலுவலகம் : அறை–ஏ, எண்.43, பழைய எண். 62/2, யுனைடெட் பிளாசா, உஸ்மான் சாலை, தி.நகர், சென்னை–600017.
Site:''எமரால்டு'', செட்டி புண்ணியம், ஜி எஸ் டி சாலை, மஹிந்திரா வேர்ல்டு சிட்டி எதிரில் (ஆர்டிஓ அலுவலகம் அருகில்), செங்கல்பட்டு–603002.

**மின்னணு ஏலம்**

நிறுவன கடன்தாரரின் சொத்துக்களை விற்பதற்கு நொடித்தல் மற்றும் திவால் சட்டத் தொகுப்பு 2016–ன் கீழ் மாண்புமிகு தேசிய நிறுவனச் சட்ட தீர்ப்பாயம் (NCLT), சென்னை பெஞ்ச் 17.08.2018 தேதியிட்ட ஆணையின்படி விற்பதற்கான அறிவிப்பு

IBBI கட்டுப்பாடுகள் 2016 (கலைத்தல் நடைமுறை) விதிமுறை 32–ன் கீழ் M/s. ஹால்மார்க் லிவிங் ஸ்பேஸ் பிரைவேட் லிமிடெட்டுக்கு (கலைப்பில் உள்ளது) ('நிறுவன கடன்தாரர்') சொந்தமான கீழ்கண்ட சொத்துக்களை விற்பனை செய்வதற்கான ஏல அறிவிப்பு என்னவென்றால் 'எது எங்கு அல்லது எப்படி உள்ளதோ, அதை அப்படியே' என்ற முறையில் அச்சொத்துக்களின் ஏல விற்பனை நடத்தப்படும். இது மாண்புமிகு தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயத்தின் 17.08.2018 தேதியிட்ட ஆணைப்படி நியமிக்கப்பட்ட கலைப்பலுவலரால் நடத்தப்படும். விருப்பமுள்ள விண்ணப்பதாரர்கள் முழுமையான மின்னணு ஏல செயல்முறை தகவல் ஆவணத்தில் உள்ள ஏலம் தொடர்பான விதிமுறை விவரங்கள், ஏல படிவம், தகுதி வரம்பு, ஏலதாரர்களின் அறிவிப்பு உள்ளிட்டவற்றை பார்த்து, அதற்குட்படுதல் வேண்டும். விருப்பமுள்ள விண்ணப்பதாரர்கள் திரும்பப்பெறும் வட்டியில்லா டேவணித் தொகை போன்ற விவரங்களை நிறுவன கடனாளரின் இணையதளம் www.hallmarklivingspace.co.in மற்றும் சேவை வழங்குநர் இணையதளத்தில் பார்க்கவும். மின்னணு ஏல விற்பனை www.ncltauction.auctiontiger.net இணையதளம் மூலம் கூறப்பட்ட மின்னணு ஏல செயல் முறை ஆவணத்திற்கு உட்பட்டு விற்பனை நடத்தப்படும். பொருந்தக்கூடிய ஜிஎஸ்டி மற்றும் பிற வரிகள் கூடுதலாக செலுத்த வேண்டும்.

| சொத்து | பார்வையிடும் நாள் | மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம் | ரிசர்வ் விலை (INR) | டேவணித் தொகை & கடைசி தேதி (INR) | ஏல அதிகரிப்பு தொகை (INR) |
|---|---|---|---|---|---|
| எமரால்டு மனையில் உள்ள முழுவதும் முடிக்கப்படாத கட்டிடம் ஆகிய 8,98,137 சதுர அடி மற்றும் நிலம் 7.62 ஏக்கர் (6388 சதுர அடி UDS நீங்கலாக) (தோராயமாக) மனை ''எமரால்டு'' செட்டி புண்ணியம், ஜிஎஸ்டி சாலை, மஹிந்திரா வேர்ல்டு சிட்டி எதிரில், (ஆர்டிஓ அலுவலகம் அருகில்), செங்கல்பட்டு - 603002. | 11.11.2024 முதல் 26.11.2024 வரை நேரம் : காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை | 06.12.2024 மாலை 3.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை | ரூ.70.00 கோடி (ரூபாய் எழுபது கோடி மட்டும்) | ரூ.5.00 கோடி (ரூபாய் ஐந்து கோடி மட்டும்) கடைசி தேதி : 04.12.2024 மாலை 6.00 மணி வரை | ரூ.25.00 லட்சம் (ரூபாய் இருபத்தி ஐந்து லட்சம் மட்டும்) |

விற்பனை அறிவிப்பு மின்னணு ஏல செயல்முறை தகவல் ஆவணத்துடன் இணைந்து படிக்கவும். மின்னணு ஏலம் தொடர்பான விவரங்களை அறிந்து கொள்ள திரு. பிரவீன் தேவர், +91–9722778828. மின்னஞ்சல் : Praveen.thevar@auctiontiger.net அல்லது nclt@auctiontiger.net–ல் தொடர்பு கொள்ளலாம். விற்பனை தொடர்பான மேலும் விவரங்களை அறிந்து கொள்ள கீழ்க்கையொப்பமிட்டவரை தொடர்பு கொள்ளலாம் அல்லது csdhanapal.ibc@gmail.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம். காலக்கெடு, நிபந்தனைகள், விதிமுறைகள் மற்றும் மின்னணு ஏல செயல்முறை தகவல் ஆவணத்தில் உள்ள இதர சரத்துகளில் மாற்றங்கள் இருப்பின், அது நிறுவன கடன்தாரரின் இணையதளத்தில் www.hallmarklivingspace.co.in–ல் அறிவிக்கப்படும்.

தேதி : 07.11.2024
இடம் : சென்னை

**S. தனபால்**
ஹால்மார்க் லிவிங் ஸ்பேஸ் பிரைவேட் லிமிடெட்டிற்கான (கலைப்பில் உள்ளது) கலைப்பலுவலர்
Regn. No : IBBI/IPA-002/IP-N00060/2017-2018/10112
அறை எண்.103, முதல் மாடி, காவேரி காம்ப்ளக்ஸ், 96/104, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.
தொலைபேசி : 044 - 45530256/0257, மின்னஞ்சல் : csdhanapal.ibc@gmail.com


## JMJ பின்டெக் லிமிடெட்

(முன்னர் மீனாட்சி எண்டர்பிரைசஸ் லிமிடெட் என அழைக்கப்பட்டது)
CIN: L51102TN1982PLC009711
பதிவு அலுவலகம்: கடை எண். 3, 1வது தளம், ஆதி விநாயக வளாகம், எண். 3, பேருந்து நிலையம், கோபால்சாமி கோயில் தெரு, கணபதி, கோயம்புத்தூர் வடக்கு, தமிழ்நாடு – 641006. Email: investor@jmjfintechltd.com | Website: www.jmjfintechltd.com | Ph. No. : 7395922291/92

**30.09.2024–ல் முடிந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் அறிக்கை**

ரூ. லட்சத்தில்

| விவரங்கள் | முடிந்த காலாண்டு | | | முடிந்த அரையாண்டு | | முடிந்த ஆண்டு |
|---|---|---|---|---|---|---|
| | 30.09.2024 | 30.06.2024 | 30.09.2023 | 30.09.2024 | 30.09.2023 | 31.03.2024 |
| | (தணிக்கை செய்யாதது) | (தணிக்கை செய்யாதது) | (தணிக்கை செய்யாதது) | (தணிக்கை செய்யாதது) | (தணிக்கை செய்யாதது) | (தணிக்கை யானது) |
| செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் (நிகரம்) | 375.38 | 369.20 | 147.55 | 744.58 | 226.02 | 746.75 |
| காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) | 222.92 | 244.16 | 78.02 | 467.08 | 96.87 | 385.76 |
| காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரிக்கு முன் மற்றும் விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 222.92 | 244.16 | 78.02 | 467.08 | 96.87 | 385.76 |
| காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின் மற்றும் விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 166.93 | 182.26 | 46.13 | 349.19 | 64.98 | 213.78 |
| நடப்பு காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/நஷ்டம் (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) ஆகியவற்றை உள்ளடக்கியது | 166.93 | 182.26 | 46.13 | 349.19 | 64.98 | 213.78 |
| செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் | 1240.00 | 1240.00 | 1240.00 | 1240.00 | 1240.00 | 1240.00 |
| தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகளுக்கான பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) (ஒவ்வொன்றும் ரூ.10/–) | | | | | | |
| அடிப்படை மற்றும் பலம் குறைந்தது | 1.35 | 1.47 | 0.37 | 2.82 | 0.52 | 1.72 |

குறிப்பு:

1. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள் தணிக்கைக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு, நவம்பர் 06, 2024 அன்று நடைபெற்ற குழு கூட்டத்தில் இயக்குநர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்டது.
2. முந்தைய காலங்கள்/ஆண்டுகளுக்கான புள்ளிவிவரங்கள் மீண்டும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன மற்றும்/அல்லது தேவையான இடங்களில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.
3. நிறுவனத்தின் சட்டப்பூர்வ தணிக்கையாளர்கள் மேற்கண்ட காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளை மதிப்பாய்வு செய்துள்ளனர்.
4. தற்போதைய வரியில் நிகர MAT கிரெடிட் அடங்கும்.
5. Ind AS108–ன் படி காலாண்டிற்கான பகுதி அறிக்கை பொருந்தாது.

குழுவின் ஆணைப்படி
JMJ பின்டெக் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–
ஜோஜு மடத்தும்பாடி ஜானி
"நிர்வாக இயக்குனர்
DIN: 02712125

இடம்: சென்னை
தேதி : 06.11.2024

## இந்தியா ரேடியேட்டர்ஸ் லிமிடெட்

CIN: L27209TN1949PLC000963
பதிவு அலுவலகம்: 88, மவுண்ட் ரோடு, கிண்டி, சென்னை - 600 032. Tel: 044-40432210
மின்னஞ்சல்: cs@indiaradiators.com இணையதளம்: www.indiaradiators.com

**30 செப்டம்பர், 2024 அன்று முடிந்த காலாண்டு மற்றும் அரையாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்**

(ரூ.லட்சத்தில்)

| வ. எண். | விவரங்கள் | முடிந்த காலாண்டு | | | முடிந்த அரையாண்டு | | முடிந்த ஆண்டு |
|---|---|---|---|---|---|---|---|
| | | 30.09.2024 (தணிக்கை செய்யப்படாதது) | 30.06.2024 (தணிக்கை செய்யப்படாதது) | 30.09.2023 (தணிக்கை செய்யப்படாதது) | 30.09.2024 (தணிக்கை செய்யப்படாதது) | 30.09.2023 (தணிக்கை செய்யப்படாதது) | 31.03.2024 (தணிக்கை செய்யப்பட்டது) |
| 1. | செயல்பாடுகளிலிருந்து மொத்த வருமானம் | 1.58 | 1.58 | 1.58 | 3.16 | 3.16 | 6.32 |
| 2. | காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (அசாதாரண வகைகள் மற்றும் வரிக்கு முன்) | (20.98) | (22.49) | (19.71) | (42.60) | (43.02) | (79.40) |
| 3. | காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரிக்கு முன் அசாதாரண வகைகளுக்குப் பின்) | (20.98) | (22.49) | (19.71) | (43.47) | (43.02) | (79.40) |
| 4. | காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (அசாதாரண வகைகள் மற்றும் வரிக்குப் பின்) | (15.99) | (17.64) | (15.06) | (33.63) | (183.43) | (55.77) |
| 5. | காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் [உள்ளடங்கிய லாபம்/(நஷ்டம்) காலத்திற்கானது (வரிக்குப் பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்குப் பின்)] | (15.99) | (17.64) | (15.06) | (33.63) | 430.57 | 403.68 |
| 6. | சமபங்கு மூலதனம் | 90.00 | 90.00 | 90.00 | 90.00 | 90.00 | 90.00 |
| 7. | ஒதுக்கீடுகள் (மறுமதிப்பீடு தவிர) | - | - | - | - | - | (42.12) |
| 8. | ஒவ்வொரு பங்கிற்கான வருவாய் [ரூ.10/ ஒவ்வொன்றும்] | | | | | | |
| | - அடிப்படை | (1.78) | (1.96) | (1.67) | (3.74) | (20.38) | (6.20) |
| | - இளக்கிய | (1.78) | (1.96) | (1.67) | (3.74) | (20.38) | (6.20) |

**குறிப்புகள்:**

அ) மேற்குறிப்பிட்ட விரிவான காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை அறிக்கைகள் இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிபடுத்தல் தேவைகள்) கட்டுப்பாடுகள் 2015 கட்டுப்பாடு 33ன்படி இயக்குநர்களின் தணிக்கைக் குழுவால் பரிசீலனை செய்யப்பட்டு இயக்குநர் குழுமத்தால் ஒப்புதல் மற்றும் அங்கீகரிக்கப்பட்டது.

ஆ) முழு நிதி நிலை அறிக்கைகள் மும்பை பங்குச் சந்தை (www.bseindia.com) மற்றும் நிறுவனத்தின் (www.indiaradiators.com) இணையதள முகவரிகளில் கிடைக்கும்.

**இந்தியா ரேடியேட்டர்ஸ் லிமிடெட்டிற்காக**
E N ரங்கஸ்வாமி
முழு நேர இயக்குநர்
(DIN: 06463753)

இடம்: சென்னை
தேதி : 06.11.2024

## SAPTARISHI™ Agro Industries Ltd

பதிவு அலுவலகம்: படாளம் சுகர் பாக்டரி ரோடு, பழையனூர் அஞ்சல், செங்கல்பட்டு மாவட்டம், தமிழ்நாடு –603 308.
|www.saptarishiagro.com | Email: Saptarishi121@gmail.com |
CIN: L15499TN1992PLC022192 | Contact: 07940306965

**30 செப்டம்பர், 2024–ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்**

(ஒரு பங்கு விபரத்தை தவிர ரூ.லட்சத்தில்)

| வ. எண். | விவரங்கள் | முடிந்த காலாண்டு | | | முடிந்த ஆண்டு |
|---|---|---|---|---|---|
| | | 30/09/2024 தணிக்கை செய்யாதது | 30/06/2024 தணிக்கை செய்யாதது | 30/09/2023 தணிக்கை செய்தது | 31/03/2024 தணிக்கை செய்தது |
| 1 | செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் (நிகரம்) | 1631.71 | 598.48 | 518.12 | 4129.16 |
| 2 | காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) | (64.11) | 6.97 | 18.87 | 248.64 |
| 3 | வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | (64.11) | 6.97 | 18.87 | 248.64 |
| 4 | வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | (64.11) | 6.97 | 15.34 | 203.84 |
| 5 | காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/(நஷ்டத்தை) உள்ளடக்கியது (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) | (64.11) | 6.97 | 15.34 | 203.84 |
| 6 | சம பங்கு மூலதனம் | 3402.00 | 3402.00 | 3402.00 | 3402.00 |
| 7 | ரிசர்வுகள் (மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலாக) | 0 | 0 | 0 | (2669.26) |
| 8 | ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் ரூ.10/) (வருடாந்திரம் அல்ல) | (0.19) | 0.02 | 0.05 | 0.60 |
| | அடிப்படை & பலமிழந்தது | (0.19) | 0.02 | 0.05 | 0.60 |

குறிப்பு:

1. மேற்கண்ட முடிவுகள் கம்பெனியின் தணிக்கை குழுவினால் மறுபரிசீலனை செய்யப்பட்டு 06/11/2024 அன்று நடைபெற்ற கம்பெனி இயக்குனர்கள் குழு கூட்டத்தில் பதிவுக் குறிப்பு செய்யப்பட்டது மற்றும் அது கம்பெனியின் சட்ட தணிக்கையாளர்களால் குறுகிய பரிசீலனை செய்யப்பட்டது.
2. செபி (பட்டியல் மற்றும் இதர வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் மேற்கண்ட காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கம் ஸ்டாக் எக்சேஞ்சில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. காலாண்டு நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ்ச் இணையதளம் (www.bseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளத்தில் (www.saptarishiagro.com) உள்ளது.

சப்தரிஷி அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/– ரிஷப் ராவ்ஜிபாய் படேல்
நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமை நிதி அதிகாரி
DIN : 02721107

இடம் : அகமதாபாத்
தேதி : 06.11.2024